செய்தி வெளியீடு எண் : 706 நாள் : 14.04.2023

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடுஆவடி ITF டிரையத்தலான்–2023 சென்னை போரூரில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று தொடங்கி வைத்தார்.**

போதைப்பொருள் இல்லாத தமிழ்நாடு என்ற நிலையை அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளார்கள்.

அரசு மற்றும் காவல்துறை நடவடிக்கைகளுடன் பள்ளி, கல்லூரிகள், தன்னார்வலர்கள், தொண்டு நிறுவனத்தினர் மற்றும் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் தமிழ்நாடு முழுவதும் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் தீமைகள் குறித்து விழிப்புணர்வு, ஏற்படுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காவல்துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் போதை தடுப்பு விழிப்புணர்வு பேரணிகள், கருத்தரங்கங்கள், பிரச்சாரங்கள் மற்றும் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய நோட்டீஸ் விநியோகம் செய்தல் போன்றவை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த விழிப்புணர்வு பணிகளை சிறப்பாக மேற்கொள்ளும் வகையில் ஆவடி காவல் ஆணையரகம் பல்வேறு முன்னெடுப்பு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

கடந்த 2022 அக்டோபர் மாதம் 2–ம் தேதி ஆவடி காவல் ஆணைய சரகத்திற்குட்பட்ட பகுதியில் வேல் டெக் பல்கலைக் கழகத்துடன் இணைந்து போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு மாரத்தான் போட்டி நடத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து ஆவடி காவல் ஆணையரகம் சார்பில் இந்தியன் டிரையத்தலான் கூட்டமைப்பு மற்றும் சென்னை ரன்னர்ஸ் கிளப் இணைந்து "ஆவடி ITF டிரையத்தலான்–2023" போட்டிகள் சென்னை, போரூர், இராமச்சந்திரா மருத்துவக்கல்லூரி வளாகத்தில் இன்று (14/04/2023) நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நீச்சல், சைக்கிளிங் மற்றும் மாரத்தான் போட்டிகளை கொடியசைத்து தொடங்கி வைத்து சிறப்புரையாற்றி போதைத் தடுப்பு விழிப்புணர்வு வாசகம் பொறித்த பனியன்களை (T–Shirts) அறிமுகப்படுத்தினார். இந்நிகழ்ச்சியில் பதிவுக்கட்டணமாக பெறப்பட்ட தொகையில் சுமார் ரூ. 1.50 லட்சம் நிதியினை குழந்தைகளின் மருத்துவ செலவினத்திற்காக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காவல்துறை தலைமை இயக்குநர் மற்றும் படைத்தலைவர் முனைவர். சைலேந்திர பாபு இ.கா.ப. தலைமை தாங்கினார். ஆவடி காவல் ஆணையர் திரு. சந்தீப்ராய் ரத்தோர் இ.கா.ப., காவல் கூடுதல் ஆணையர் (போக்குவரத்து) திரு. நஜ்மல் கோடா இ.கா.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு. மேகநாத ரெட்டி இ.ஆ.ப., ஆவடி காவல் இணை ஆணையர் திரு. விஜயகுமார் இ.கா.ப., ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராச்சாமி, மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுதர்சனம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர் திரு.ராமச்சந்திரன், காவல் துணை ஆணையர் திரு. பாஸ்கர் உள்பட பலர் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in